www.tamilarangam.net

தமிழ்மன்ற வெளியீடு

# தமிழ்நாதம்

இதழ்-3 புரட்டாதி-90

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERE SUR -
SEINE : FRANCE




பிராங்பேட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

S. Nakendra Singam

தமிழ்மன்ற வெளியீடு

# தமிழ்நாதம்

TAMIL MANTRAM e.V. FRANKFURT

இதழ்-3 புரட்டாதி 90

## இதழின் உள்ளே....

பத்திரிகைக் குழுவினர் :

திருவாளர்கள் :

S. சிவசுப்பிரமணியம்.
R. சஞ்சயன்.
B. பாலசுப்பிரமணியம்.
A. சொர்ணலிங்கம்.
R. சேகர்.
R. ரவிசங்கர்.

தொடர்பு :-

ஆசிரியர், தமிழ் நாதம்.

S. SIVASUBRAMANIYAM
Falltorstraße 25
6000 Frankfurt/M. 60
Tel. 069 / 45 95 86


- ஆசிரியருடன் ஓர் நிமிடம்.
- கண்ணோட்டம்
- பங்கசம் - சிறுகதை
- கவிதைகள்.
- ஆய்வுக் கட்டுரை - AIDS
- சிறுவர் பூங்கா.
- உணர்வின் முடிவு - தொடர்கதை
- சமையல் குறிப்பு
- குறுக்கெழுத்துப் போட்டி.
- கேள்வி பதில்.
- வாசகர் கருத்து.
- மன்றச் செய்திகள்.
- விளையாட்டுப் பகுதி.

www.tamilarangam.net




" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். "

— குறள் -

அன்பு வாசகர்களே!

உலக நாடுகள் அனைத்துமே ஈராக், அமெரிக்க யுத்தமொன்று ஏற்படுமா? ஏற்படுமாயின் தாம் யார் பக்கம் சார்ந்து நிற்கப் போகிறோம் என்று விவாதித்துக் கொண்டிருக்கின்றன. உலக மக்கள் அனைவரது பார்வையும் அந்த ஒரு திசையிலேயே திருப்பப்பட்டு இருக்கையில் உலகின் பல சிறிய நாடுகளில் எந்த நோக்கமுமே இல்லாமல் அல்லது ஏதோ ஒரு கொள்கைமேல் ஏற்பட்ட அதீத பிடிப்பினால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் உயிர்கள் தினமும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான மக்கள் யுத்த நடவடிக்கைகளால் பட்டினிச் சாவை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகம் தனது பார்வையையும், தயவையும் இவர்களுக்கும் நீடிக்குமா என்றால் இது ஒரு வினாக்குறிதான்.

வாசக நேயர்களே, உங்கள் மனநிலை எப்படியிருக்கும் என்று எம்மால் ஊகிக்கமுடிகிறது. ஈழத்தில் இனப்படுகொலை நடப்பது இன்று நேற்றல்ல. ஆனால் ஒவ்வொரு தடவையும் யார் உயிர் பிழைத்தார்கள்? யார் யாருடைய உயிர்கள் பறிக்கப்பட்டன என்று ஊகிக்க முடியாமலும், உண்மையை தீர்க்கமாக அறியமுடியாமலும் கலங்கிக் கொண்டிருப்பதும் அல்லது எது நடந்தாலும் பரவாயில்லை என்ற ஒரு விரக்தி நிலைக்குத் தள்ளப்படுவதும் சகஜமாகிப் போய்விட்டது. இவ்விக்கட்டான சூழ்நிலைகளில் இறந்து போனவர்களுக்கு எமது அஞ்சலியை நாம் தெரிவித்துக் கொள்வதுடன் இந்நிலை என்று மாறி எம் மக்கள் அமைதியான வாழ்க்கைக்குத் திரும்பப் போகிறார்கள் என்பதனை எதிர் நோக்கிய வண்ணம் இருப்போம்!

நன்றி — ஆசிரியர் -

www.tamilarangam.net

# கண்ணோட்டம்


# DER MESSE TURM

## கண்காட்சிக் கோபுரம்.

- கனகசபை - ரவீந்திரன் -

பிராங்பேர்ட் நகரில் அனைவரையும் கவர்ந்தும் அதே வேளையில் வியப்புக்கும் உள்ளாக்கும் மெஸ்ஸே கோபுரம் பற்றி நீங்கள் அறிந்தவற்றுடன் இதோ சில ஆச்சரியமூட்டும் தகவல்கள்.

இக் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஐரோப்பாவிலேயே மிகவும் உயர்ந்த கட்டடம் இது தான் என்ற பெருமையைப் பெறப் போகிறது. இதைவிட இன்னுமொரு சாதனையும் இதற்கு உண்டு. 1988 ஆம் ஆண்டு ஆடி மாதம் 13 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் 1989 ஆம் ஆண்டு ஆவணி 19 ம் திகதி 167 மீற்றர் கட்டிமுடிக்கப்பட்டது ஓர் உலக சாதனையாகும். இவ் வருடம் ஐப்பசி 1 ம் திகதி



இக் கோபுரம் திறந்து வைக்கப்படும் பொழுது இதன் மொத்த உயரம் 256.5 மீற்றராகும். இதைவிட இதற்குப் பொறியியல் அடிப்படையில் மற்றோர் பெருமையும் உண்டு. அதாவது சரியாக நூறு வீதம் தரைக்குச் செங்குத்தாக இக் கோபுரம் எழுப்பப்பட்டிருக்கிறது. இவ்வளவு உயரமான ஒரு கோபுரத்தை இவ் வகையில் செங்குத்தாக அமைப்பதென்பது தொழில் முறையில் மிகமிகக் கடினமான ஓர் காரியம். 160 கி.மீ/மணி வேகத்தில் வீசக் கூடிய ஓர் புயற்காற்றுக்கு கோபுரத்தின் உச்சி 14 சத மீற்றர் சாய்வை மட்டுமே கொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐம்பத்தைந்து மாடிகளையும்; அதன்மேல் ஓர் கோபுரத்தையும் கொண்டுள்ள இக் கட்டிடத்தின் பன்னிரண்டு மாடிகளை மெசே நிர்வாகம் தான் வைத்துக்கொண்டு மிகுதியை தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கவிருக்கிறது. ஒவ்வொரு மாடியின் தளப்பரப்பளவு 1200 சதுர மீற்றர்களாகும். இவ் வகையில் மொத்தத் தளப்பரப்பு 61,600 சதுர மீற்றர்களாகும். இது கிட்டத்தட்ட பதினொரு கால்ப்பந்தாட்டத் திடல்களின் மொத்தப் பரப்புக்குச் சமமாக அமையும். இதன் வாடகைப் பெறுமதி என்ன தெரியுமா? ஒவ்வொரு தளமும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 600 $m^2$ பரப்பளவிற்கும் மாதம் ஒன்றுக்கு DM 42,000,- வாடகை வசூலிக்கப்படும். அந்த வகையில் ஒரு சதுரமீற்றர் தளத்தின் வாடகைப் பெறுமதி மாதம் ஒன்றுக்கு DM. 70,- ஆகும். பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் வாடகைக்குப் பெறுவதற்காகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலாவதாக ஓர் யப்பானிய வங்கி ஒரு பகுதியை வாடகைக்குப் பெற்ற பெருமையைத் தட்டிக் கொள்கிறது. எங்கள் துரதிருஷ்டம் பொதுமக்கள் நாம் நினைத்தபடி உள்ளே போய்வர முடியாதபடி பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. காந்தக் குறியீட்டு அட்டைகளை (MAGNETIC CARDS)ப் பாவித்து மட்டுமே எவரும் உள்ளே நுழைய முடியும். அது மட்டுமல்லாமல் 24 மணி நேரமும் பாதுகாவலர்கள் இதனைப் பாதுகாத்த வண்ணம் இருப்பார்கள். எந்த மாடிக்குப் போவதாக இருந்தாலும் உள்ளே நுழைந்ததும் 24 மின்தூக்கிகள் (LIFT) உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரு செக்கனுக்கு ஆறு மீற்றர் வேகத்தில் மேலே செல்லக் கூடியவை. நடந்து படிகளில் செல்லவிரும்புவோருக்கு நான்கு படிக்கட்டு வழிகளும் உண்டு. ஒவ்வொரு மாடியிலும் தீ விபத்து ஏற்படும் கட்டத்தில் தானியங்கித் தீயணைப்புக் கருவிகளும் உண்டு. நிலத்தளத்தில் 940 கார்களுக்குரிய நிறுத்துமிடங்களும் உண்டு.

இத்தகைய ஓர் கோபுரத்தை அமைக்க எவ்வளவு மூலப் பொருட்கள் செலவாகியிருக்கின்றன தெரியுமா? 59,000 கன மீற்றர் கொங்கிறீற்று, 10,000 தொன் இரும்பு, 3,00,000 $cm^3$ மரம் அதாவது 3,000 மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. 450 கிலோ மீற்றர் நீளமான மின் கம்பிகள், இவை ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாளுக்கு 8,000 K.W. மின் பாவனைக்குப் பயன் படுத்தப்படும். இதன் உச்சியில் அமைந்த பிரமிட் உருவக் கோபுரம் 10.7 மீற்றர் உயரமும் 12.3 தொன் எடையுங் கொண்ட ஓர் தனித்துவமான அமைப்பையுடையது. இதன் உச்சியில் காணப்படும் சிவப்பு விளக்கைப் பாருங்கள். இதன் எடை 500 கிலோகிராம். இதன் வலு 1000 W. (நாம் வீடுகளில் பாவிப்பது 25 W முதல் 100 W வரைதான்). இதன் ஒளியை 100 கிலோ மீற்றர் தூரத்திலிருந்தும் பார்க்கக் கூடியதாகவிருக்கும். ஒட்டு மொத்தமாக இக் கோபுரத்தின் நிறை 2,00,000 தொன். கிட்டத்தட்ட 25 இலட்சம் வளர்ந்த மனிதர்களின் மொத்த நிறைக்குச் சமம். இன்னுமொரு ஆச்சரியமான தகவல் என்னவென்றால் இவ்வளவு உயரமான இக்கட்டடம் கட்டப்பட்டு வரும் இவ் இரண்டு வருட காலத்தில் இதுவரை எந்த விதமான ஒரு விபத்துக்களும் அறிவிக்கப்படவில்லை. இவ் ஆச்சரியமான கட்டடத்தை உங்கள் பார்வையிலிருந்து நீங்கள் மறைக்க நினைத்தால் நீங்கள் பிராங்பேர்ட் நகரிலிருந்து வெகு தூரம் செல்லவேண்டும்.


ஆதாரம்:
"Pflaster Strand".
September '90.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




"நான் சொல்கிறேன் கேள் பிள்ளை, நீ எண்ணி நூற்றியெட்டுத் தேங்காயை எங்கடை அரச மரத்துப் பிள்ளையாருக்கு உடை. உன் கஷ்டமெல்லாம் இறங்குதோ இல்லையோ பார்." இப்படித் தன் பொக்கு வாயைத் திறந்து கூறினாள் பங்கசத்தின் அருமைப் புருஷனின் தாயார். பங்கசத்தின் மாமியையும் குறை கூற முடியாது. உண்மையில் அவள் மகன் பரந்தாமன் கெட்டவன் அல்ல. ஏமாற்றிக் கலியாணமும் செய்யவில்லை. ஓரளவு படித்தவன். அவனின் கெட்ட காலமோ அல்லது பங்கசத்தின் தலைவிதியோ என்னவோ கலியாணத்தை முடித்து இரண்டு கிழமைக்குள் தான் பார்த்து வந்த கணக்காளன் வேலையை இழந்தான்.

பிள்ளையாருக்கு தேங்காய் உடைக்க ஒரு விருப்பம் அந்தக் கஷ்டத்திலும் இருந்தது பங்கசத்துக்கு. ஆனால் பாவம் என்ன செய்வாள்? அவளை அக்கினி தேவியின் முன் பத்து வருடங்களுக்கு முன்பு சபதம் செய்து கைப்பிடித்த பரந்தாமன் இப்போ தினமும் கள்ளோ, சாராயமோ இல்லாமல் உறங்க மாட்டான். அவன் கவலையை மறக்கத்தான் குடிக்க ஆரம்பித்தானோ என்னவோ தன் குடும்பம் மெதுவா அழிந்து கொண்டிருப்பதை அவன் அறியமுடியாத அளவு முட்டாளாக இருந்தான். தே வேண்டித்தான் வண்டுகள் மலர்களைத் தாவும். அதில் மட்டும் சிறிதும் குறைவில்லாத பரந்தாமன் இதுவரை ஆறு பிள்ளைகளுக்குத் தாயாக்கி விட்டான் பங்கசத்தை. பிறந்த ஆறும் ஆறுமுகன்களாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கவேண்டாம் அவள் வாங்கிதேடி அலையவும் வேண்டும் என ஆண்டவன் சாபமிட்டு விட்டான். "விழுந்தவனை மாடு ஏறி உழக்கியது" என எம் முன்னோர் கூறினார்கள். இப்போது தான் புரிகிறது அவர்கள் "மாடு" என்று ஆண்டவனைக் கூறினார்கள் போலும்.

பரந்தாமன்! அழகான பெயர். தாய் தந்தையர் வைத்தது அவனுக்கு. ஆனால் அந்த ஊரில் அவனை பரந்தாமன் என்றால் ஒருவரும் அறியார். சோம்பேறி நம்பர் 1 என்றால்தான் யாவரும் அறிவர்.. கவலை யாவையும் சுமக்குவாள் பங்கசம். காலை 8 மணிக்கு எல்லாம் அலாரம் வைத்தது போல எழுந்துவிடுவான். தினமும் குளிப்பான். குப்பையிலேதான் மாணிக்கங்கள் இருப்பது போல அவனுக்கு இந்த ஒரு பழக்கம் வழக்கமாக இருந்தது. 9 மணியானவுடன் அந்த அரசமரத்து வாசிகசாலைக்குப் போய் அன்றைய புதினங்கள் எல்லாம் ஒன்றும் விடாமல் படிப்பான். அதன் பின்பு அவ் ஊர் சோம்பேறிகள் 2,3,4,5 உடன் வீண் அலட்டல் அலட்டுவான் மதியம் வரை. மதிய சாப்பாட்டிற்குப் பங்கசத்திடம் காசு கொடுத்துவிட்டு வந்தவன் போல சரியாக 1 மணி அடித்ததும் திரும்ப வீடு போவான். இவன் கொடுத்தானோ இல்லையோ பங்கசம் ஏதோ சமைத்து இருப்பாள், தன் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வருவார்கள் என்பதற்காக. அதில் இவனும் பங்கு போடுவான். அதைப் பங்கசமும் பரிமாறுவாள். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பதை ஏன் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதை நன்கு விளங்கிக் கொண்டவள் பங்கசம். ஒரு ஆண் பெண் இல்லாமல் வாழலாம். அதைப் பற்றிக் கவலைப்படாது ஊர். சோம்பேறிகள் உருவாக மாட்டார்கள். ஆனால் ஒரு பெண் ஆணில்லாமல் இருக்கக் கூடாது. இதனால் பழிகளுக்குப் பல வழிகள் வரும். பல சோம்பேறித் திண்ணை தூங்கிகள் தோன்றுவார்கள். இதனால்தான் பெண்ணுக்கு இப்படி ஒரு பழமொழியைக் கூறினார்கள் போலும் முன்னோர்கள். ஏனெனில் எந்தக் கஷ்டத்திலும் மானத்தோடு வாழ நினைப்பவள் அவள்!

மதியச் சாப்பாட்டின் பின்பு எப்படியோ தட்டிச் சுற்றி 5 ரூபாவாகிலும் பறித்துவிடுவான் பரந்தாமன் பங்கசத்திடமிருந்து. அவளுக்குத் தெரியும் இந்தக் காசு அவன் பின்னேரத் தாகத்துக்கென்று. ஆனால் பிரச்சினை வரக்கூடாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதற்காக கொடுத்தே விடுவாள். "ஆனை வரும் முன்னே மணி ஓசை வரும் பின்னே" என்று சொல்லுவதில் காட்டியும் "பன்றி வரும் பின்னே அதன் மணம் வரும் முன்னே" என்பதுபோல் பரந்தாமன் தள்ளாடி தள்ளாடி வந்து சேருவான் பத்துப் பதினொரு மணியளவில். இதற்கிடையில் பிள்ளைகளைத் தூங்கவிட்ட பங்கசம் அவன் வந்ததும் சாப்பிட வைத்துப் படுக்க வைத்துப் பின் அவனின் அலட்டல், உளறலுக்கு மத்தியில் எப்படியோ தூங்கிவிடுவாள். ஏனெனில் அவ்வூரிலேயே அவளைப் போல் கடின வேலை செய்யும் ஆண்கள் கூட இருக்கமாட்டார்கள்.

தினமும் அதிகாலை 4 மணிக்கு எழும்பும் பங்கசம் தன் முதல் வேலையை ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஆரம்பிப்பாள். அந்தப் பெரிய இடத்தை, குப்பையை, சாணத்தை அகற்றிச் சுத்தப் படுத்துவாள். பின் அங்குள்ள மாடுகள் அனைத்திலும் பால் கறக்க வேண்டும். இதே வேலை அவள் செய்து முடிக்க 7, அல்லது 7½ மணியாகிவிடும். தன் அற்பமான ஊதியத்தையும் இனமாகக் கொடுக்கும் ½ போத்தல் பாலையும் கொண்டு வீடு செல்வாள். அந்தப் பாலில்தான் அவள் கொஞ்சமாகிலும் ஆரோக்கியமாக இருந்தாள். பிள்ளைகளுக்காக ஏதாகிலும் காலை உணவு செய்து உண்ண வைத்து பள்ளிக்கூடம் அனுப்பிவிடுவாள். தகப்பனைப்போல் பிள்ளைகள் இல்லாமல் தன்னைப் போல் சுறுசுறுப்பாக இருப்பது கண்டு தனக்குள்ளேயே சந்தோசப்படுவாள். பின்பு 9 மணி முதல் 12 மணி வரை அவ்வூர் அரிசி, மிளகாய் திரிக்கும் ஆலையாக [illegible]. இதிலும் அவள் முழுச் சக்தியை இழந்தாலும் சிறிதாவது உழைத்துக்கொண்டே இருந்தாள்.

அன்றன்று கிடைக்கும் ஊதியத்தில் சிக்கனமாக ஏதாவது வாங்கி மதிய உணவைப் பரிமாறுவாள், தன் கணவன் பிள்ளைகளுக்கு. அதன் பின்பு மாலை 4 மணி முதல் 6, 6½ மணிவரை தோட்டங்களில் களை பிடுங்குவாள். களைகளோடு இரவு சாப்பாட்டிற்கு கீரை, பசளி போன்றவற்றையும் அவள் பிடுங்க மறப்பதில்லை.

இப்படியே ஏழிரண்டு ஆண்டுகளை எப்படியோ உருட்டி வந்த பங்கசம் இனிமேல் கடின வேலை செய்யக் கூடாது, செய்தால் உயிருக்கு ஆபத்து வரும் என வைத்தியர்களால் எச்சரிக்கப் பட்டு விட்டாள். அவளது பெண்கள் யாவரும் நன்கு படித்துவிட்டார்கள். அத்தோடு மூத்தவள் நகரில் உள்ள வங்கியிலும், அடுத்தவள் தான் படித்ததை மற்றவர்களுக்கும் உபயோகி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


-க்க வேண்டுமெனப் படிப்பிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். சில தினங்களில் மற்றைய மூவரும் ஏதோ தொழில் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அவளின் கடைக்குட்டி படித்திருக்கும் இன்னும் வேலை கிடைக்கவில்லை. ஆனால் முயற்சி செய்து கொண்டேயிருந்தான். யாவரும் வேலையில் சேர்ந்துவிட்டார்கள் என்றாலும் பங்கசம் இப்போதும் வேலை செய்துகொண்டே இருந்தாள். இந்த நேரத்தில் கடைக்குட்டியின் நியமனக் கடிதம் வந்தது. அடுத்த கிழமை வேலை தொடங்கலாம். ஆனால் முத்திரைச் செலவு 200 ரூபா தேவையென. இதைப் பார்த்து பரவசமடைந்த பங்கசம் தான் தினமும் செய்யும் வேலையை விட கஷ்டமாக உழைத்தாள் தன் கடைக்குட்டிக்காக. எப்படியோ தான் வைத்திருந்த காசோடு சேர்த்து 190 ரூபா சேர்த்துவிட்ட பங்கசம் நியமன நாளுக்கு முதல் நாள் வழமைபோல் காலை வேலையை முடித்துவிட்டு மாலை வேலையாக தோட்டத்துக்குச் சென்றாள். வழமையாக மூன்று தோட்டங்கள் செய்தால் 10 ரூபா உழைப்பாள். அன்று என்றொரு நாள் மாமியார் சொன்னது அவளுக்கு இன்றும் நினைவில் இருந்தது. ஒரு தேங்காயாவது உடைக்க வேண்டும் என்று எண்ணித்தேங் தேங்காய் வாங்குவதற்காக இன்னொரு தோட்டமாக நான்கு அன்று செய்தாள். வேலை முடிந்ததும் கிடைத்த 13ரூபாவில் 10 ரூபாவை மடியில் வைத்தாள். மிகுதி 3ரூபாவில் இரண்டு கற்பூரக் கட்டியும் ஒரு தேங்காயும் வாங்கிக் கொண்டு குடல் தெறிக்க அரச மரப் பிள்ளையாரிடம் ஓடிய அவள் கற்பூரத்தைக் கொழுத்திவிட்டு, மூன்று முறை நெற்றியில் குட்டி வணங்கியவள் இனி நான் வைத்தியர்கள் சொன்னதுபோல் ஆறுதலாக ஓய்வாக இருக்கலாம் என்ற உள்ளப் பூரிப்புடன் தேங்காயை ஓங்கி அடிக்க உயர்த்தியவள் ஐயோ என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தாள் புரண்டாள் அலறினாள். பின் சிறிது மயங்கி விட்டாள். இதைப் பார்த்த அங்குள்ளவர்கள் திடீரென ஒரு காரைக் கூப்பிட்டு ஏற்றியதுதான் தாமதம் கார் விர் ரென்று கிளம்பிற்று. கண் விண் தெரியாமல் போன கார் சாரதி, எதிரே தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்த பரந்தாமனைக் கவனிக்கவேயில்லை. அவன் "அம்மா" என்று கத்தியபடி சில்லுக்குள் போய்விட்டான், இறந்துவிட்டான். ஒரு அலறலையும் காரில் திடீரென ஏற்பட்ட சத்தத்தையும் அரை மயக்கத்திலிருந்து கேட்ட பங்கசம் அடிபட்டு இறந்தது தன் கணவன் என தெரிந்து

www.tamilarangam.net

கொண்டாரோ என்னவோ
அவரும் உயிர் பிரிந்துவிட்டார்.
"நாலுபேர் போற்றும்படி தன்
பிள்ளைகளை நன்கு படிப்பித்து
வார்த்துவிட்ட பங்கசம் இவ்-
வுலகில் தன் புருஷனுடு சந்தோ-
சமாக வாழக் கொடுத்து வைக்-
-கவில்லை. மேலுலகத்திலாவது
நன்றாக வாழட்டும்" எனக்
கூறிய ஊரார் அவர்களின்
சடங்கு செய்யப் பிரிந்து
போய்க்கொண்டிருந்தார்கள்.

— முற்றும் —

# கவிதைகள்



## புதிர்

வாழ்க்கை என்னும்
இரயிலிலே .......
பிரயாணம் செய்கின்ற
சாதாரண பயணி நான்
சேரும் இடம்
புதிரான போதிலும்
பயணத்தின் நோக்கத்தினை
புரிந்து கொள்ள முயலுகிறேன்
சொத்துக்களை சுமைகளாய்
என்னுடன் சேர்த்துக் கொண்ட
-போதிலும்
பயணத்தின் முடிவினிலே
என் தேகத்தைக் கூட
இம் மண்ணில் விட்டு
கொண்டு செல்ல
முடிவதில்லையே.

— திருமதி. ஜெ. இராஜரட்ணம்.
சிமெல்ஸ்.

## இயற்கையின் நியதி

என்னைப் பார்த்து நான் சிரிக்கிறேன்
ஏன்
நான் மனிதன்
மனிதனை மனிதன் சிரிப்பதுதான்
இயற்கை நியதி.

- அ. தவபாலகிருஷ்ண-
முன்ஸ்ரர்.



## நவீன கோவலன்

மாதவியை தேடிப் போன
கோவலனுக்காக காத்திருந்த
கண்ணகி என்று கதை உண்டு
இன்று காதலனை தேடிப் போன
கண்ணகிகளிற்காக காத்திருக்கும்
கோவலன்மார்கள் நிறைய உண்டு.

- பா. ஞானம்.
குறூன் பேக்.



www.tamilarangam.net

# இளமைக்கோலங்கள்



கார்குழல் கலைந்து கொள்ளும்
காமம் என் மனதில் கனம் பெறும்
கள்ளும் சேர்ந்து கொள்ளும்
கற்பனை கரை கடக்கும்.

கல்லூரிப் பெண்கள் முதல்
கறிக்கடைக் கிழவி வரை
கண்ணால் மேயச் சொல்லும்
கற்பனையில் துயில் புரியும்.

காலை வெளுத்து வரும்
மனம் புண்பட்டுப் போய்க் கிடக்கும்
போதை புலம் பெயரும்
புத்தித் தெளிவு வரும்
ஐம்புலம் அடங்கி வரும்
கடிவாளம் கட்டப்படும்.

மீண்டும் மாலை வரும்
மனம் மேயத் தொடங்கி விடும்
கடிவாளம் கழற்றப்படும்
கற்பனைக் குதிரை யோடும்
போதை தலைக்கேறும்
மனம் புரையோடிப் போயிருக்கும்.


— சஞ்சீவி —
டாமினரட்.

# கண்ணீரிலும்



காதல்
என்பது
கண்களிலே தான்
ஆரம்பமாகிறது
என்று
எழுதிய
கவிஞர்கள்
அதே
காதலி
அதே
கண்களில்
இருந்து
வரும்
கண்ணீரிலும்
முடிவதுண்டு
என்று
எழுத
மறந்திட்டது
ஏனோ!

— சேகர் —
பிராங்பேர்ட்.



www.tamilarangam.net

# ஆய்வுக்கட்டுரை

# AIDS

- கனகசபை ரவீந்திரன் -

கடந்த இதழில் வெளிவந்த AIDS பற்றிய கட்டுரையில் AIDS என்பது என்ன? அதன் அடிப்படை என்ன? அது எவ்வாறு பரவலாம் என்பன பற்றி ஆராய்ந்தோம். இவ்விதழில் ஒவ்வொரு மனிதனும் AIDS இலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், நோயுள்ள ஒருவர் எவ்விதம் இந் நோய் பிறருக்குத் தொற்றாமல் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதையும் ஆராய்வோம்.

எயிட்ஸ் நோய் ஒருவரிலிருந்து மற்றவருக்குப் பரவக் கூடிய சந்தர்ப்பங்கள் பல இருந்தாலும் இவையனைத்திற்கும் ஒரே ஒரு விதிதான் உண்டு. நோய்க் கிருமிகளை தன்னுடலில் கொண்ட ஒருவர் அதாவது அவர் ஓர் எயிட்ஸ் நோயாளியாக இருக்கலாம் அல்லது அவர் HIV வைரஸை காவும் ஓர் காவியாக மட்டும் எயிட்ஸ் நோய் இல்லாதவராகவும் இருக்கலாம், எவ்வாறு இருப்பினும் இக் கிருமிகள் காணப்படும் இவரது குருதி அல்லது உடற் பாய் பொருள் நோயற்ற ஒருவரின் குருதியுடன் அல்லது உடற்பாய் பொருளுடன் நேரடியாக தொடுகையுற வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் நோயற்ற ஒருவரின் உடலில் எயிட்ஸ் கிருமிகள் நுழைய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இப்படியான ஓர் நிகழ்வு உடலுறவின் போதும் அல்லது ஊசிமூலம் போதைப்பொருளைப் பாவிப்பவர்கள் அசிரத்தையாக ஒரே ஊசியினைப் பாவிக்கும் போதும்தான் ஏற்படும் வாய்ப்பு அதிகம். ஆகவே மனிதன் இவ்விடங்களில் அவதானமாகச் செயற்படும்போது தன்னை மட்டுமல்லாது நோயுள்ள ஒருவர் பிறருக்கும் தீங்கு ஏற்படாத வண்ணம் பாதுகாப்பாக நடந்து கொள்ளக் கூடும்.

முதலில் பாலியல் உறவின் போது நாம் கைக்கொள்ளக் கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்க்கலாம் ;-

உதடுகளில் முத்தமிடும் சந்தர்ப்பங்களில் பற்களினால் உதடுகளில் காயம் ஏற்பட்டு இரத்தக் கசிவு ஏற்படவோ அல்லது முரசுகளில் இரத்தக் கசிவு உள்ளவர் ஒருவருடைய குருதி மற்றவருடைய வாயில் முன்பே இருக்கக் கூடிய காயங்களில் அல்லது முத்தமிடும் போது ஏற்படக் கூடிய காயங்களில் பரவச் சந்தர்ப்பமிருக்கிறது. ஆதலினால் எயிட்ஸ் நோய்க் கிருமிகள் உடலில் காணப்படலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கருதுபவர்கள் உதட்டில் முத்தமிடும் வழக்கத்தைக் கைவிட வேண்டும். இதே வேளையில் முத்தம் கொடுக்கும்போது ஏதும் இரத்தக் கசிவு ஏற்படாமற் போனால் உமிழ் நீரினால் கிருமித் தொற்று ஏற்படலாம் என்று அஞ்சவேண்டிய அவசியமில்லை. சாதாரண உடலுறவின்போது இனவிருத்தி உறுப்புகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக முன்தோற் சுரப்பி எனப்படும் ஆண் பெண் உறுப்புகளில் காணப்படும் சுரப்பிகளில் இருந்து ஒருவித உராய்வு நீக்கிச் சுரப்பி வெளிவிடப் படுவது இயல்பு. இது ஆண்களிடம் முன்தோற் சுரப்பு என்றும், பெண்களிடம் பெண் உறுப்பின் சுரப்பு என்றும் கூறப்படும். இவற்றை விட ஆண் குறியிலிருந்து வெளிவிடப்படும் விந்துப் பாய்பொருளில் எயிட்ஸ் கிருமிகள் குறுகியநேரம் உயிர் வாழும் சாத்தியக் கூறுகள் இருப்பதாலும், உடலுறவின்போது பெரும்பாலும் உராய்வினால் ஏற்படக் கூடிய சிறு காயங்களினால் இரத்தக் கசிவுகள் ஏற்பட்டு அவை ஒன்றுடன் ஒன்று கலப்பதாலோ அல்லது முன் குறிப்பிட்ட ஏதாவது சுரப்புக்கள் மற்றவருடைய இரத்த ஓட்டத்தில் கலப்பதாலோ கிருமிகள் ஒருவரிலிருந்து ஒருவருக்குத் தொற்றை ஏற்படுத்தலாம்.

இதைவிட வாய்மூலம் (Oral Sex) மலவாசல் மூலம் (Anal Sex) ஏற்படுத்தப்படும் உடலுறவில் காயங்கள், இரத்தக் கசிவுகள் ஏற்படுவதற்கு அதிக சந்தர்ப்பம் இருப்பதால் எயிட்ஸ் நோய் இருக்கும் அல்லது நோய்க் கிருமிகளை உடலில் கொண்டிருக்கும் (இவை சோதனைகள் மூலம் இலகுவில் அறியப்படலாம்) ஒருவர் இவ்வகைப் பாலுறவு முறைகளைக் கைவிடுவது அவசியமாகும். இவ்வாறே இளவயதினர் நேரடி உடலுறவு கொள்ளப் பயந்து ஒருவித மேலோட்டமான தொடுகை முறையில் கைகளையோ, அல்லது பாலுறுப்புக்கள் தவிர்ந்த வேறு உறுப்புகளையோ உபயோகித்து (Petting) உறவு கொள்ளுவது சகஜம். இத்தகைய சந்தர்ப்பங்களில் முன்பு ஏற்பட்ட சாதாரண உடற்காயங்கள் புதிதாக ஏற்படக்கூடிய இரத்தக் கசிவுடன் அல்லது உடற்பாய்பொருட்களுடன் தொடுகையுறும்போது கிருமிகள் உள்ள ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்று ஏற்படலாம்.

தன்னினச் சேர்க்கைப் பழக்கம் உள்ளவர்களுக்கும், எதிரினச் சேர்க்கைப் பழக்கம் உள்ளவர்களுக்கும், பலருடன் உடலுறவு கொள்ளும் வழக்கம் இருப்பதால் அவர்கள் தொற்றுக்கும் ஆளாகும் வாய்ப்புகள் அதிகம். அதே வேளையில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்கள், விலைமாதர்கள், அடிக்கடி வாழ்க்கைத் துணையை மாற்றம் செய்பவர்கள் ஆகியோருடன் உடலுறவு வைத்துக் கொள்ளும் போதும் இக் கிருமிகள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்குப் பரவும் சந்தர்ப்பங்கள் அதிகம்.



— தொடரும் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் பூங்கா

கும்மியடி பெண்ணே கும்மியடி பெண்ணே கும்மியடி பெண்ணே

கும்மியடி
பெண்ணே கும்மியடி
தமிழின் கீதம் சொல்லிக் கும்மியடி
நாடு செழிக்க நல்லது நடக்க
நாடி வந்து நன்மை வேண்டி நின்று . கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
கிழக்கு வாசல் உதயம் வேண்டி
வயல் செழிக்கக் கும்மியடி
மேலோர் கீழோர் என்றில்லை என்று சொல்லியடி


கும்மியடி பெண்ணே கும்மியடி
ஜாதி ஒன்று தெய்வம் ஒன்று
ஞானம் மட்டும் மெய்தான் என்று சொல்லியடி
காலம் வெல்லும் கனிவு பெறும் என்று கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
பெண் விடுதலை வேண்டிக் கும்மியடி
ஆணுக்கு நாம் அடிமை இல்லை என்று சொல்லியடி
சோர்வு இன்றி சோகை இன்றி கை தாக்கி கும்மியடி

கும்மியடி பெண்ணே கும்மியடி
சீதனப் பேயை விரட்டியடி
பணம் கொடுத்து மணம் முடிக்க மாட்டோம் என சொல்லியடி
சமுதாய எழுச்சி வேண்டி கண்ணனை நினைத்துக்
கும்மியடி .

ஆக்கம் . இ . ரவிசங்கர் .

கும்மியடி பெண்ணே கும்மியடி பெண்ணே கும்மியடி பெண்ணே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்கதை

-யசோதரன்-



# உணர்வின் முடிவு

-SEGAR-

முன்கதைச் சுருக்கம்:

பணக்காரனாக இருந்தாலும் படிப்பு ஏறாத காரணத்தால் வாடகைக் கார் சாரதியாக வேலைபார்த்து வரும் ராஜா தன் வயதான தாயோடு வாழ்ந்து வருகிறான். அவனது தாய் அவனுக்கு ஓர் கல்யாணத்தைச் செய்துவைக்க முனையும்போது தனக்கு இருக்கின்ற உயிர்க்கொல்லி நோயினைத் தெரிந்துகொண்டு அதற்கு மறுத்து வருகின்றான். ஓர் பெண்ணைச் சந்தர்ப்பவாதத்தால் விதவையாக்கும் போக்கு அவனுக்குச் சரியாகப்படவில்லை. இருப்பினும் தாயின் வற்புறுத்தலினால் கல்யாணியைக் கல்யாணம் பண்ணத் தீர்மானித்து அவளது தந்தையாரிடம் தன் நோயைப்பற்றிச் சொல்லிவிட அவர் அவனது நற்குணத்தைக் கருதிக் கடவுள்மேல் பழியைப் போட்டு கல்யாணம் பண்ணி வைத்துவிடுகிறார். கல்யாணம் பண்ணி மூன்று வருடங்கள் கடந்த பின்னர் அவன் தன் நோய்க்குப் பலியாகப் போகும் ஓர் நிகழ்வை எதிர்நோக்க ஆரம்பித்துவிடுகிறான்....

'முற்றத்தில் புதிதாக நட்ட மல்லிகைச் செடி மொட்டவிழ்ந்து விட்டிருப்பதை ஒரு குழந்தையின் குதூகலத்துடன் மனைவி கல்யாணி அம்மாவிடம் காட்டிக் கொண்டிருந்தாள். அம்மாவும் வெகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூரிப்பாக அதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். குழந்தை ஆனந் தளிர் நடையில் மழலை பயின்று கொண்டிருந்தான். ஓ! இந்த நான்கு வருடங்களில் சந்தோசத்தின் விளிம்பை எய்துவதையன்றி வேறெதுவுமே அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் என் குடும்பம் என் நிலையறிந்தால்....? நினைத்துப் பார்க்க முடியாத வேதனை நெஞ்சில் சூழ்ந்தது. வேண்டாம், எதுவுமே சொல்லவேண்டாம். எதுவுமே என்றால் சொல்ல முடியாது. சொல்ல முடியவில்லை.

இரவின் அமைதியில், பௌர்ணமியின் குளிர்மை. மனக்கிலேசமெதுவுமின்றி மென்மையான உறக்கத்தில் கல்யாணி அருகில் அவளை அணைத்தபடி மகன் ஆனந். எனக்குத்தான் தூக்கம் மறந்து பல நாளாயிற்றே. தூங்கினால் கூட, இதயத்தைத் துளைத்தெடுக்கும் வலி துடித்தெழ வைத்துவிடும். டாக்டர் தந்த தூக்க மாத்திரையும் பயனற்றுப் போய்விட்டது. வலிப்பது என்று வெளியில் சொல்ல முடியாதது மட்டுமல்ல, வலியின் அவஸ்தையை, முக அசைவில் வெளிப்படுத்த விரும்பாமல் மறைப்பதுதான் பெருங்கடினமாயிற்று.

வெளியில் செல்வதைக் கூட நான் மிகவும் குறைத்துக் கொண்டேன். அம்மாவுடன் ஒவ்வொரு சிறு விடயத்திலும் கவனமெடுத்து ஆறுதலாகப் பழகினேன். மனைவி பிள்ளையுடனும் நாளின் பெரும்பகுதி செலவழித்தேன். அவர்களுக்கு என் மாற்றம் இயல்பாக இருந்ததால் பிரம்மிப்பைத் தரவில்லைப் போலும். மூன்று மாதங்கள் மூன்று நாளாய் ஓடிற்று. மறுபடியும் டாக்டரிடம் போனபோது, அவரே என் நிலை கண்டு வருந்தினார். இருதயத்தின் முக்கால் பகுதியையும் முற்றாய் நோய் ஆக்கிரமித்து விட்டதாம். இருதயத் துடிப்பும் மிக வேகமாக அடங்கி வருகிறதாம். என் ஆயுட் காலத்தை நாட்கணக்கில் குறித்துவிட்டார் டாக்டர். ஆனால் ஆண்டவனின் தீர்ப்பு எப்படியோ? உள்ளமெல்லாம் வரண்டு, உணர்வுகளின் துடிப்பும் அடங்கிய நிலையில், எங்கோ சூன்யத்தை நிலைநிறுத்தி வெகுநேரம் கழித்து வீடு வந்தேன். வீடு அமைதியில் துயில் கொண்டிருந்தது. சலனமற்ற உள்ளங்கள், உறக்கத்தில் நாளைய வாழ்வைக் கனவு காணலாம். ஆனால் நான்... நான்... எனக்கு இன்றைய இரவே ஒரு கனவு! ஆம் நாளையும் நான் இருப்பேன் என்பது என்ன உண்மை? இந்த இரவின் நிசப்தத்தில், என் உயிர்த்துடிப்பும் அடங்கிவிட்டால்...., ஏதோ ஒரு அச்சம் சிறு புள்ளியாகத் தோன்றி மனம் முழுவதும் மர்மக்கோலம் போட்டது. மெதுவாக எழுந்து அம்மாவின் அறைநோக்கி நடந்தேன். என்னைப் பெற்று, வளர்த்து ஆளாக்கிய தெய்வங்கள். அவர்களைப் பற்றி வாய் வார்த்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழ் நாத சஞ்சிகை
ஓங்கி வளர எங்கள் நல்வாழ்த்துக்கள்.



கொழும்பு
உணவு விடுதி

karl straße 11
6000 Frankfurt am Main
T.P 069-232407

S.A


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகவா சொல்லமுடியும்? அறையினுள்ளே அம்மாவும் பேரனை அரவணைத்தபடி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தா. ஆம், இனி அவவின் அரவணைப்புத்தானே அவனுக்கும்! விம்மி எழுந்தவேளை, அழுகையாக மாறும் முன்னம் அவவின் காலைத்தொட்டு வணங்கினேன். ஆனந்தை மெலிதாக முத்தமிட்டேன். விருட்டென வெளியேறி என் அறைக்குள் நுழைந்தேன்.

என்னுடைய கல்யாணி கூட அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறாள். கபடமற்ற அவள் முகத்தில் கவலைக் குறியே காணோம். ஏதோ கனவு கண்ட புன்னகையின் சிறு கீற்றாக இதழ்கள் மலர்ந்திருந்தன. அவள் கணவனின் வாழ்க்கை குறுகிய எல்லை குறித்து அவளுக்கு என்ன தெரியும்? தெரியும் மட்டுமாவது நிம்மதியாகத் தூங்கட்டும். பாவம்! மெல்லக் குனிந்து அவள் உள்ளங்கால்களில் முத்தமிட்டேன். கால்கள் இரண்டும் பனிக்கட்டியாகக் குளிர்ந்தன. மார்கழி மாதக் குளிரின் கொடுமையறியாது இப்படித் தூங்குறாளே! போர்வையை எடுத்துப் போர்த்துவிட்டுப் பக்கத்தில் சென்று படுத்தேன். உறக்கம் வரவில்லை. இருளின் அந்தகாரத்தில், முகட்டை வெறுமையாகத் துழாவிக் கொண்டிருந்தேன். வலி! மீண்டும் வேகமாக ஆரம்பிப்பது போல.... பிரமையல்ல நிஜம்தான்! தூக்க மாத்திரையைத் தேடி எழுந்தேன். மேசையில் போத்தல்..... ஆனால் காலியாக இருக்குதே?? ஆ... பக்கத்தில் ஏதோ கடிதம்..... என்னது, யார் எழுதியது? எதுவும் புரியாமல் சித்தம் கலங்கியது. மங்கிய வெளிச்சத்தை, சற்றுக் கூட ஒளிர்வித்துக் கடிதத்தை வாசித்தேன். கல்யாணிதான் எழுதியிருக்கிறாள். கையில் பிடித்திருந்த கடிதம்போல் உள்ளமும் படபடக்க நான் வாசித்தேன்.

"என்றும் என் உயிரினுமினியவர்க்கு!

இப்படி ஒரு கடிதம் என்னிடமிருந்து எதிர்பார்க்க, ஒருபோதும் உங்களால் முடியாது. அது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு நீங்களில்லாமல் ஒரு கணமாவது வாழமுடியாது என்பது உங்களுக்கும் தெரிய வேண்டுமே. உங்கள் வாழ்நாள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எப்போதோ நான் அறிவேன். ஆமாம், பெண் பார்த்துவிட்டுப் போனபின் நீங்கள் மட்டும் திரும்பவும் வந்து என் அப்பாவுடன் கதைத்தது எல்லாமே, வீட்டின் பின்புறம் நின்ற என் காதிலும் விழத்தான் செய்தது. இளமைக் காலத்தில் எதிர்பாராமல் வரும் இன்பக் கனவுகளில் மயங்கிக் கொண்டிருந்த எனக்கு இது அதிர்ச்சியாக இருந்தாலும், ஏதோ ஒரு அபூர்வ சக்தியால், உங்கள் அன்பு மனதின் அரவணைப்பை நாட மனம் விழைந்தது. உங்களுடன் வாழ்ந்த இந்த நான்கு ஆண்டு-

www.tamilarangam.net

-களில், நாற்பது ஆண்டுகள் வாழ்ந்துவிட்ட முழுமை எனக்கு. அந்தப் பெருமையிலேயே நான் போய்விட நினைத்தது பிழையாக எனக்குத் தெரியவில்லை. எனக்கு எப்படி எல்லாம் தெரிந்தது என்று நினைக்கிறீர்களா? நாம் என்ன, வெறும் கணவன், மனைவியென்ற சட்டத்துக்குட்பட்ட சம்பிரதாய வாழ்வா வாழ்ந்தோம்? உங்கள் ஒவ்வொரு அசைவிலும், முகபாவத்திலும், உங்கள் உணர்வையும், உள்ளத்திலிருப்பதையும் அறிய முடிந்த எனக்கு, உங்கள் இருதயத்தில் புற்றுநோய் என்றும், டாக்டரிடம் அடிக்கடி போவதும், மாத்திரை சாப்பிடுவதுமா தெரியாமல் போய்விடும்? நடு இரவில் தூக்கம் வராமல், நீங்கள் அனுபவிக்கும் இம்சையை நானும் அறிவேன். யாருக்கும் தெரியாது என்ற நினைவில் இருக்கும் உங்கள் நிம்மதியைக் கெடுக்க விரும்பாமல், மனத்துள்ளேயே குமைவேன். "இறைவா! எனது உயிரைப் பறித்து விடு, என்னுயிரை விட்டு விடு" என்று எத்தனை கோடி முறை ஏங்கியிருப்பேன். எல்லாமே பொய்த்துப் போவதை நேற்றுப் புரிந்து கொண்டேன். ஆமாம்! உங்கள் நிழலான நான், உங்களை நிழலாக நேற்று டாக்டர் வரையிலும் தொடர்ந்ததை எப்படி அறிவீர்கள்? எல்லாம் அறிந்த பின், வாழ்வு

சூன்யமான பின்பு, இருளான இந்த உலகில் என்னால் வாழ முடியுமா? என் பெற்றோரை பெற்றவர் போல் பாசம் காட்டும் உங்களைப் பெற்றவளே, பெற்றெடுத்த செல்வ மகனே... நினைத்துப் பார்த்தேன். ஆனால் நீங்கள் இல்லாமல் போய்விட்ட பின்பு இங்கு எதுவுமே சாசுவதம் என என்னால் நிச்சயப்படுத்த முடியவில்லை. ஏனெனில் உங்கள் மூச்சில்தான் நான் உயிர் வாழ்கிறேன். உங்கள் மூச்சு நின்றபின்னர், என் வாழ்க்கையும் செத்துவிடும். அது உங்களுக்குப் புரியும். புரிந்தால் மற்றவர்களும் என்னை மன்னிக்கட்டும்.

என்றும் உங்கள்
கல்யாணி.


கடிதம் என் கையை விட்டு நழுவியது. என் உயிரும், உடலை விட்டு நழுவுவது போல் ஒரு உணர்வில் ஆன்மா நடுங்கியது. கண்ணீரால் நிறைந்த கண்களை இமைகளால் இறுக்க முயன்றபோது, என்றுமில்லாதபடி இதயத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு பெரு வலி. அதை உணர முன்னரே, இருண்ட பாதாளத்தில் தலைகுப்புற விழுவதுபோல் ..... படுக்கையில் சரிகிறேன்.
நான்.... நான் ...........
கல்யாணி.... !!

- முற்றும் -




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

-திருமதி. வனஜா கிருபாகரன்-



# சமையல் குறிப்பு



## தேங்காய் பர்பி


**தேவையான பொருட்கள் :**

- தேங்காய் – 2 பெரியது
- சீனி – 3/4 இறாத்தல்.
- முந்திரிப் பருப்பு (கஜு) – சிறிதளவு.
- நெய் – சிறிதளவு.
- ஏலக்காய் – சிறிதளவு.

**செய்முறை :**

முதலில் தேங்காயை மிருதுவாகத் துருவி வைத்துக் கொள்ளவும். கஜுவையும் சிறிது சிறிதாக உடைத்து நெய்யில் வறுத்தெடுத்துக் கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தில் 1/4 போத்தல் தண்ணீர் விட்டு அதற்குள் சீனியைக் கொட்டி அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். பாகு கெட்டியான கம்பிப் பதமாக வந்தவுடன் துருவிய தேங்காய்ப் பூவைப் போட்டுக் கிளறவேண்டும். தேங்காயும் பாகும் சேர்ந்து கெட்டியாக ஆனதும் வறுத்த கஜுவையும் நெய்யையும் விட்டுக் கிளற வேண்டும். (கிளறும்போது நுரைத்துக் கொண்டு வரும். கவனமாக இருக்கவேண்டும்) பின்னர் ஏலப் பொடியையும் தூவிக் கிளறி இறக்கவேண்டும்.

பின்னர் நெய் பூசிய ஒரு தட்டில் கொட்டி சமமாகத் தட்டி ஆறியதும் கத்தியால் சிறு துண்டுகளாக வெட்டிப் பரிமாறலாம்.



www.tamilarangam.net

# மைசூர் போண்டா

தேவையான பொருட்கள் :

உளுந்தம் பருப்பு - 1 இறாத்தல்
தேங்காய் - 1
உப்பு - சிறிதளவு
எண்ணெய் - 1 போத்தல்
கறிவேப்பிலை - சிறிதளவு

செய்முறை :

உளுந்தம் பருப்பை ஊறவைத்து, ஒரு மணித்தியாலத்தின் பின்பு கழுவி, சிறிதளவு நீர் சேர்த்துப் பசைபோல் அரைத்து எடுக்க வேண்டும். தேங்காய் ஒரு பாதியை பல்லுப் பல்லாக நறுக்கி எடுத்து அரைத்த மாவுடன் சேர்க்க வேண்டும். சிறிதளவு கறிவேப்பிலையையும், தேவையான அளவு உப்பையும் சேர்த்துக் குழைத்து வைத்தபின் சட்டியில் எண்ணெயை விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் மாவைச் சிறு உருண்டைகளாக உருட்டி எடுத்து எண்ணெயில் போட்டுச் செந்நிறமாகும் வரை பொரித்தெடுக்கவும்.


மாலையில் தேநீருடன் பரிமாறும்போது மிகவும் சுவையாக இருக்கும்.

▲ மரக்கறி வகைகளைச் சமைக்கும்போது மூடிச் சமைப்பதால் அதிலுள்ள சத்துக்கள் ஆவியாகி வெளியேறாமல் தடுக்க முடிகிறது.

▲ தேசிக்காயைப் பாவிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வைப்பதால் அதிக அளவு சாறு கிடைக்கிறது.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி இல II



1வது பரிசு DM 100,-

2வது பரிசு DM 50,-

3வது பரிசு DM 25,-

S. SIVASUBRAMANIYAM
Falltorstraße 25
6000 Frankfurt/M. 60
Tel. 069 / 45 95 86

www.tamilarangam.net

## போட்டி நிபந்தனைகள் :

1. ஒருவர் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிப்படிவங்கள் எத்தனையையும் அனுப்பிவைக்கலாம். ஆனால் அவை அனைத்துமே தமிழ்மன்ற முத்திரையைக் கொண்டிருக்க வேண்டும்.

2. பூர்த்திசெய்யப்பட்ட போட்டிப் படிவங்கள்

S. SIVASUBRAMANIAM
- EDITOR -
TAMIL MANTRAM,
FALLTOR STRASSE 25
6000 FRANKFURT AM MAIN 60

என்ற முகவரிக்கு 15-11-1990 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கவேண்டும்.

3. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் கிடைக்கப்பெற்றால் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம் பரிசாக DM 100,- ம், இரண்டாம் பரிசாக DM 50,- ம், மூன்றாம் பரிசாக DM. 25 ம் பரிசாக வழங்கப்படும்.

4. ஒருவர் மட்டுமே சரியான பதிலை அனுப்பியிருந்தால் அவருக்கு மட்டும் முதலாம் பரிசுக்குரிய தொகை அளிக்கப்பட்டு போட்டி முடிவுற்றதாகக் கருதப்படும்.

5. இருவர் மட்டும் சரியான விடையை அனுப்பும்பட்சத்தில் அவர்கள் இருவரும் குலுக்கல் முறை பரிசுக்குரிய ஒழுங்கில் தெரிவு செய்யப்பட்டு பரிசுக்குரிய தொகை அளிக்கப்படும். அத்துடன் போட்டி முடிவுற்றதாகக் கருதப்படும்.

அனுப்புபவரின் பெயரும் விலாசமும்:

பெயர் ------------------

விலாசம் ------------------



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இடமிருந்து வலமாக :-**

1- 6 தமிழில் காணப்படும் சிறந்த நூலொன்று. வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் பாடல்களாகத் தருகிறது.

9 - 13 அந்தரங்கம் என்று பொருள்படும் ஒரு சொல்.

15 - 16 இதற்கு வலிமை என்று பொருள் இருந்தாலும், முதலில் ஞாபகம் வருவது துன்பம் என்ற பொருள்தான்.

19 - 23 தமிழ் புராணக்கதைகளில் பிரபல்யமான ஒரு முனிவருக்கு இவ்வாறும் ஓர் பெயருண்டு.

25 - 26 இதன் கொடுமையை வேறு எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாது. உணர்வோடு சம்பந்தப்பட்டது.

30 - 31 தெய்வத்தின் பெயரைச் சொல்லி இதைச் செய்வதை இப்போது சட்டபூர்வமாகத் தடுக்கச் சொல்கிறார்கள்.

33 - 36 ஒரு வகை மருந்துச் சரக்கொன்றின் பெயர்.

53 . 56 சிங்கத்தைக் கூடக் கொல்லக் கூடியதாகச் சொல்லப்படும் ஓர் கற்பனைப் பறவையின் பெயர்.

**மேலிருந்து கீழாக :-**

1- 33 இங்கு இடம்பெறும் சொல்லுக்கும்; சூதாட்டத்திற்கும் தமிழ் இலக்கியத்தில் பெரும் சம்பந்தமுண்டு.

8 - 16 மேனியில் ஏற்படும் வாட்டத்தைக் குறிப்பதோடு துன்பம் அடைதல் என்ற பொருளையும் தரும்.

15 - 31 முதிர்வு அல்லது இரக்கம் என்ற பொருளைத் தரும் ஓர் பதம்.

22 - 62 நாம் எது செய்ய முனைந்தாலும் அதற்கு ஒரு இது இல்லாது போனால் செய்யும் செயல் அர்த்தமற்றதாகிவிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

35 - 59 ஓர் இராகத்தின் பெயர்.

40 - 56 முன்பு வழக்கத்திலிருந்த ஓர் அளவையின் பெயர். மூளை என்ற பொருளையும் தரும்.

## கீழிருந்து மேலாக :-

2 - 10 "உட்பொருள், மெய்ப்பொருள் காண்பது அறிவு." இங்கு இது உட்பொருள் என்பதைக் குறித்துக் கிடக்கிறது.

45 - 61 அழகிய சொற்றொடர் அல்லது உரை நடையைக் குறிக்கும் ஓர் பதம். ஈற்றெழுத்து இழந்து கிடக்கிறது.

49 - 57 ஓர் இலக்கண விகுதி – பலர் பால் விகுதியுள் அடங்கும் சொற்கள் இவ் விகுதியைத் தாங்கி முடியும்.

## குழம்பிவரும் சொற்கள் :-

3 - 19 சந்தேகம் என்று பொருள்தரும் இதே பதம் உறுதி என்ற மற்றொரு பொருளையும் தரும். இங்கு மேல் கீழாகக் குழம்பிக் கிடக்கிறது.

4 - 44 மரங்களிலிருந்து வடிக்கப்படும் ஒரு இரசாயனப் பொருளின் பெயர். இதே பெயரில் ஒரு மரமும் உண்டு. இங்கு மேல் கீழாகக் குழம்பிக் கிடக்கிறது.

5 - 21 பாரி மன்னன் ஆண்ட நாட்டின் பெயர் என்று இலக்கியம் கூறுகிறது. இங்கு ஈற்றெழுத்து இழந்து மேல் கீழாகக் குழம்பிக் கிடக்கிறது.

26 - 50 எதிலுமே ஓர் இவ்வியல்பு / தன்மை இல்லாவிட்டால் வாழ்க்கை சுவாரஸ்யம் இழந்துவிடும். இங்கு மேல் கீழாகக் குழம்பிக் கிடக்கிறது.

42 - 48 பழமை வாய்ந்த அதே வேளையில் புதுமையான இனிய ஒலி எழுப்பும் ஓர் இசைக் கருவி. இங்கு இடம் வலமாகக் குழம்பிக் கிடக்கிறது.

www.tamilarangam.net

47-63 ஒழுக்கமுடன் வாழ்ந்த நன்மக்கள் இப்பொருளை அடைவதாக நன்னெறி கூறுகிறது.

49-51 உயிர், அழகு, தயிலகிறம் என்ற பொருளைத் தரும் ஒரு பதம். இங்கு இடம் வலமாகக் குழம்பிக் கிடக்கிறது.

59-63 பொதுவாக ஓர் மன்னனைச் சூழ்ந்திருக்கும், அவனைச் சார்ந்தவர்களை இப்படி அழைப்பது வழக்கம். ஆனால் தற்போது ஓர் கேலிப்பொருள் படும்படியும் கூறப்படுவதுண்டு. இங்கு இடம் வலமாகக் குழம்பிக் கிடக்கிறது.

# கேள்வி-பதில்

எஸ்.கே.ஆர். சிவான்.
டாம்ஸ்ரட்.

கே: மேற்கு நாட்டின் கலாச்சாரத்தினைப் பார்த்தபின் எமது கலாச்சாரத்தினைக் கிண்டல் செய்யும் எமது நாட்டவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: எமது நாட்டின் கலாச்சாரத்தைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ளாதவர்களே அவ்வாறு கிண்டல் செய்பவர்கள் என்று நினைக்கிறேன்.

-0-

பாலா,
பிராங்போர்ட்.

கே: வெளிநாடுகளில் அதுவும் குறிப்பாக சில நாடுகளில் தமிழ்க் குடும்பங்களில் அதிகமாக விவாகரத்துக் கோருகிறார்களே என்ன காரணம்?

ப: கருத்துவேறுபாடுகள்தான் காரணம்.

-0-

R. சுந்தரம்
குமேர்ஸ்பேர்க்.

கே: ஜேர்மனியில் பிறந்து வாழும் குழந்தை ஏன் தமிழ் படிக்கவேண்டும். அக்குழந்தை என்ன நாட்டுக்குத் திரும்பிச் செல்லவா போகிறது?

ப: அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட மாட்டீர் என நம்புகிறேன்.

-0-




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சி. பஞ்சலிங்கம்.
நொயிஸ்.

கே: தமிழ் மன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றாமல் இருக்கும் தமிழ்க் குடும்பங்கள் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: பங்கு பற்றுவதும் விடுவதும் இவ்வொருவரினதும் சுய விருப்பம். ஒருவேளை தமிழ் மன்ற நிர்வாகத்தில் குறை இருக்குமாகில் அவர்கள் மன்றத்துக்குச் சுட்டிக்காட்டிக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட பின்னர் பங்குபற்றலாம்.

க. இராஜகோபால்,
பாட் கொம்பேர்க்.

கே: தமிழ் மன்றத்தின் பெயரைப் பாவித்துச் சிலர் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கிறார்கள்! அதைத் தடுக்க என்ன வழிமுறை எடுக்கவேண்டும்?

ப: நீங்கள் "தமிழ் நாதம்" ஆசிரியரின் விலாசத்துக்கோ, அல்லது செயலாளரின் விலாசத்துக்கோ கடிதமூலம் அறிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும்.



மபா,
பொன்.

கே: வாழ்க்கையின் அழுக்கில் விழுந்தவர்களைத் தூக்கி விடுவீர்களா?

ப: மனம் உண்டு. இடம் இல்லை.

சிவா,
பிராங்பேர்ட்.

கே: சிறுவர்களுக்குத் தமிழும், பெரியோர்களுக்கு ஜேர்மன் மொழியும் பயில உதவும் தமிழ்மன்றம் ஏன் ஆங்கில மொழியையும் பயில வசதி செய்து கொடுக்கக் கூடாது?

ப: தாய்மொழியை அறியாத பிள்ளைகளாகச் சிறுவர்கள் வளர்ந்து விடக் கூடாது என்பதற்காக அவர்களுக்குத் தமிழையும், ஜேர்மன் நாட்டில் வாழும் வரைக்கும் அந் நாட்டு மொழியைப் பழகிச் சமாளித்துக் கொள்வதற்காக பெரியோர்களுக்கு ஜேர்மன் மொழியும் கற்பிக்க முதல் நடவடிக்கைகளாக எடுத்துள்ளார்கள். தொடர்ந்து வசதிகள் ஏற்படும்போது சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் கற்பிக்க முயற்சி செய்யலாம்.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி இல I இன் முடிவும் பரிசு பெற்றோர் விபரமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | 2 ம் | 3 பு | 4 ■ | 5 ம | 6 ■ | 7 ப | 8 ல |
| 9 சி | 10 ல | 11 ப் | 12 ப | 13 தி | 14 கா | 15 ர | 16 ம் |
| 17 ஸ் | 18 வ | 19 ர | 20 ம் | 21 ■ | 22 ழ் | 23 த | 24 இ |
| 25 ட | 26 ■ | 27 வ | 28 த | 29 ம் | 30 ■ | 31 நா | 32 ■ |
| 33 ர் | 34 கா | 35 ■ | 36 க | 37 ல | 38 வை | 39 ட் | 40 டு |
| 41 ■ | 42 டை | 43 ம | 44 ■ | 45 கா | 46 ண் | 47 டி | 48 கை |
| 49 ணி | 50 ய | 51 ன் | 52 அ | 53 ர் | 54 ■ | 55 ய | 56 ப |
| 57 ச | 58 ர் | 59 வா | 60 தி | 61 கா | 62 ர | 63 ம் | 64 ■ |

முதலாவது பரிசு. DM. 100,-

திரு. K. தனபாலசுந்தரம்.
HANSBOCKLER STR. 75,
2850 BREMERHAVEN.

இரண்டாவது பரிசு. DM 50,-

திரு. N. ஆபிரகாம்
HAHNER STR. 23
5030 HÜRTH - EFFEREN

மூன்றாவது பரிசு. DM. 25,-


திரு. S. கேசவன்
PFINGST.BRUNNEN STR. 31.
6000 FRANKFURT AM MAIN 90.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கருத்து




93200 St. DENIS
FRANCE.

ஆசிரியர்,
தமிழ் நாதம்
ஜேர்மனி.

அன்புடையீர்!

தங்களது நல்நோக்குடனும், தமிழ் நெஞ்சங்களின் ஆதரவுடனும் வெளியாகும் தமிழ் நாதம் எனும் இதழ்களைச் சுவைக்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

இந் நூல் மனிதமேடையாக அமையாது மனித நேச மானிட மேடையாக அமைய வேண்டும் என்பதுடன் இதில் படைக்கப்படும் எக் கருத்தும் விமர்சனத்துக்குள்ளாகும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அந்த விமர்சனம் - அப்படைப்பு மனித நேசத்தைச் சென்றடைய வேண்டும். அத்துடன் நம் இனிய மொழியாம் தமிழை வளர்க்கவும் இந்த இதழ்கள் உறுதி பூண்டிட வேண்டும்.


பொதுவாக தமிழ்நாதம் ஆரம்பநிலையில் இருப்பதால் அதிகம் நாம் எதிர்பார்க்க முடியாது. இதுவே போதும் என்ற திருப்தி ஏற்படுகிறது. ஆனால் இன்னும் வேண்டும் என்ற உணர்வும் எண்ணமும் காலப் போக்கில் எமக்கு ஏற்படும் வகையில் ஆசிரியரும் அதன் நலன் விரும்பிகளும் பாடுபட வேண்டும்.

முதல் இதழின் அட்டைப் படம் இரண்டாவது இதழின் அட்டைப்படத்தை விட அருமை.

நன்றியுடன்
அன்பின்
— கீழ்க்கரவைப்
பொன்னையன் —

உணர்வின் முடிவு தொடர்கதை பாதியில் நிற்பது எமது ஆவலைத் தூண்டிவிட்டுள்ளது. அந்த இதழ் எப்போது வரும் என எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றோம். கதாசிரியர் கதையைக் கொண்டு செல்லும் விதம் அபாரம்!

— நேசன்
பொன் —





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் சார்பற்று தமிழ்-
மன்றம் இயங்கிவரும் அதே
வேளையில் நம் தாய் நாட்டில்
நடைபெற்று வரும் அசம்பாவி-
-தங்களைக் கண்டித்து பிராங்-
பேர்ட்டில் நடாத்திய ஊர்வலம்
முக்கியத்துவம் வாய்ந்தது.
இவ்வாறு தமிழ் மக்களின் நலன்
கருதி மேலும் பல சேவைகளைச்
செய்யவேண்டும் என வாழ்த்து-
கின்றேன்.

— ராஜசேகரன்
பேர்லின்-

தமிழ் நாதம் முதல் இதழைப்
படித்துச் சுவைத்த என்னை
உங்கள் இரண்டாவது இதழ்
மேலும் மெய்மறக்கச் செய்து-
விட்டது.

குறிப்பாக AIDS பற்றிய
ஆய்வுக் கட்டுரை மேலை நாடு-
களில் இருந்து தமிழில்
வாசித்து விளங்கக் கூடியதாகச்
செய்தமைக்கு மகிழ்ச்சியடை-
கிறேன். தொடர்ந்தும் இது-
பற்றிய விளக்கத்தை அடுத்த
இதழ்களில் எதிர்பார்க்கிறேன்.

— கனகராஜா,
புல்டா -



"தமிழ் நாதம்" இதழில்
சிறுவர்களுக்காக "சிறுவர்
பூங்கா" என்னும் ஒரு பகுதி-
யை ஒதுக்கியிருப்பது மிகவும்
வரவேற்கத்தக்கது. சென்ற
இதழில் வந்த "நாளும்
சொல்லும் தமிழ்ப் பாட்டு" என்-
று ஆரம்பிக்கும் பாடலுக்குத்
"தமிழ் நாதம்" ஓவியரின்
கை வண்ணம் பாராட்டத்தக்-
கது.

இதனைவிட சிறுவர்களுக்-
கான நன்னெறிக் கதை-
களையும் தங்கள் சிறுவர்
பூங்காவில் சேர்த்துக்கொண்-
டால் பயனுள்ளதாக அமையும்.

- உஷா தேவன்
நொயிஸ் -

தமிழ் நாதம், இதழ் 2 இல்
வெளியாகிய குறுக்கெழுத்துப்
போட்டி இல.1 இலும் தங்கள்
கவனம் குறைந்துவிட்டது
ஏனோ? இடமிருந்து வலமாக
36 - 40 ல் "இரண்டாவது
எழுத்துக் குற்றிழந்து காணப்-
-படுகிறது" என்ற சொல்லைச்
சில புத்தகங்களில் விழுங்கி
விட்டீர்களோ!

இம்முறையாவது கவனமாக
செயற்படுவீர்கள் என நம்பு-
கிறேன்.

சந்திரன்
பிராங்பேர்ட்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்றச்செய்திகள்

## நூல்நிலையத் திறப்புவிழா

தமிழ் மன்றம் ஓர் புதிய நூல்நிலையம் ஒன்றினைத் தமிழ் மக்களுக்காக, கரிதாஸ் நிறுவனத்தின் உதவியுடன் MAINKAI 40, FRANKFURT 1 என்னுமிடத்தில் நிறுவியுள்ளது.

இந் நூல் நிலையத்தை திரு. வே. பாலராஜா அவர்கள் 21.07.90 இல் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். அன்று வருகை தந்த சிறுவர் சிறுமிகளுக்கு அவர் பாலர் பாடப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்ததுடன், நூல் நிலையம் வருங்காலத்தில் சிறப்புடன் விளங்க வேண்டும் என்று வாழ்த்தி நிலையத்திற்காக நன்கொடையும் வழங்கினார்.

இந் நூல் நிலையத்தின் வளர்ச்சிக்காக திரு. சண்முகநாதன் அவர்கள் சிறிய பணத்தொகையையும் அன்பளிப்புச் செய்தார்.

அன்றைய நூல்நிலையத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை குறைந்திருந்த போதிலும், உரிய நேரத்தில் நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

## கண்டன ஊர்வலம்.

இலங்கையில் நடந்து வரும் அசம்பாவிதங்கள் குறித்து பிராங்பேர்ட் தமிழ் மன்றத்தினர் 11.08.90 சனிக்கிழமை ஓர் கண்டன ஊர்வலம் நடாத்தப்பட்டது. இந்த ஊர்வலம் காலை 11 மணியளவில் அல்ட ஒபர் (ALTE OPER) என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டு பி.ப. 2 மணியளவில் றோமர் (RÖMER) என்னுமிடத்துக்கு அருகாமையில் முடிவுற்றது. இவ்வூர்வலத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட 400க்கும் அதிகமானோர் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதுவே தமிழ் மன்றத்தினரால் பிராங்பேர்ட் நகரில் நடாத்தப்பட்ட முதலாவது ஊர்வலம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் நிகழ்ச்சி

25.08.90 இல் பிராங்பேர்ட் சமூகசேவைப் பகுதியும், கரிதாஸ் ஸ்தாபனமும் சேர்ந்து நடாத்திய 10 வது ஆண்டு விழாவின் போது பிராங்பேர்ட் நகரிலுள்ள சகல நாட்டு மக்களினதும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சியில் தமிழ் மன்றச் சிறுமிகளின் கும்மி நடனமும், குறத்தி நடனமும் பலரது பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டுப் பகுதி



## கிரிக்கட்

I.

Westerwald விளையாட்டுக் குழுவிற்கும் தமிழ் மன்ற விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சிநேகித பூர்வமான கிரிக்கட் போட்டிகள் கடந்த 29.07.90 இலும் 19.08.90 இலும் நடைபெற்றன. இந்த இருதடவை நடந்த போட்டிகளிலும் தமிழ் மன்றக் குழுவினர் வெற்றியீட்டினார்கள்.

19.08.90 இல் Westerwald இல் நடைபெற்ற போட்டியின் போது தமிழ் மன்ற விளையாட்டுக் கழகத்தினரைச் சிறந்த முறையில் உபசரித்தமைக்குத் தமிழ் மன்றம் Westerwald கழகத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

II.

BOCHUM விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கடந்த 08.09.90 இல் தமிழ் மன்ற விளையாட்டுக் கழகத்திற்கும் LUDENSCHEID கழகத்திற்குமான ஆரம்பச் சுற்றுப் போட்டியில் தமிழ்மன்ற விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. தொடர்ந்து விளையாடியதில் தமிழ் மன்றம் இறுதிப்போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

BOCHUM விளையாட்டுக் கழகமும் KREFELM விளையாட்டுக் கழகமும் விளையாடவிருக்கும் அரை இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் கழகம் 23.09.90 இல் தமிழ் மன்றக் கழகத்துடன் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் மன்றக் கிரிக்கட் விளையாட்டுக் கழக வீரர்கள். 1990.

1. திரு. ரவிசங்கர். (தலைவர்)
2. திரு. செல்வரட்ணம். (உ. தலைவர்)
3. திரு. நரேந்திரகுமார் (முகாமையாளர்)
4. திரு. பாவராஜா
5. திரு. குணரட்ணம்
6. திரு. ஜெயக்குமார்.
7. திரு. பயஸ் பாக்கியநாதன்.
8. திரு. விக்னேஸ்வரன்.
9. திரு. ஆனந்.
10. திரு. நரேந்திரசிங்கம்.
11. திரு. விக்ரமன்.
12. திரு. பத்மநாதன்.
13. திரு. ஆனந்தராஜா.
14. திரு. கிரி.
15. திரு. சுந்தரேஸ்வரன்.
16. திரு. தயேந்திரன்.

# மார்கழி இதழில்

- தமிழ் மன்றத்தின் இரண்டாவது ஆண்டுச்சிறப்பு மலர்
- புதிய தொடர்கதை
- நகைச்சுவைத் துணுக்குகள்

மற்றும் பல புதிய அம்சங்களுடனும் அதிக பக்கங்களுடனும் எதிர்பாருங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்நாத வாசகர்களுக்கு

மார்கழி மாதம் நடைபெற இருக்கும் தமிழ் மன்றத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சியை முன்னிட்டுத் "தமிழ் நாதம்" இதழ் 4, சிறப்பு மலராக வெளிவரவுள்ளது. இதனை முன்னிட்டு தமிழ் நாத வாசகர்களாகிய உங்களிடமிருந்து சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவற்றை எதிர்பார்க்கிறோம். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த சிறுகதை ஒன்றுக்கு DM.50,- பரிசளிக்கப்படும். மற்றும் உங்கள் சிறந்த ஆக்கங்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும்.

பத்திரிகைக்குழு
- தமிழ் நாதம்

www.tamilarangam.net

# BANGKOK

## THE FIRST

**Thai Restaurant**

in Frankfurt.

Sandweg 17
6000 Frankfurt a.M.
Tel. (069) 491360

Geöffnet: MO. bis Sa. 12.00-14.30 uhr.
18.00-22.30 uhr.

Dienstag Ruhetag Bangkok Restaurant


# Siam

**Thai Restaurant**

Am Hauptbahnhof 8, I. Etage
Ecke Kaiserstrasse
6000 Frankfurt a.M.
Tel. (069) 25 34 44

Geöffnet: MO bis SO. 12-14.30 uhr.
18.00-22.30 uhr.

Sonntag Ruhetag Siam Restaurant




**Chumporn Thai Restaurant und Cocktails**

Dreieichstr. 7,6000 Frankfurt/M. 70-Sachsenhausen, Tel. 069/618173

Geöffnet: Di--So 12.00-14.30 uhr. 18.00-22.30 uhr.

Montag Ruhetag Chumporn Restaurant

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கலைகளிலே ஈடுபாடுடையவன்
கவலைகளை மறக்கிறான்"


# சேகர் ஆர்ட்ஸ்
# SEGAR Arts



## Commercial Artist

வாரமாதசஞ்சிகைகளுக்கான அட்டைப்படங்கள், கருத்துப்படங்கள், விளம்பரபோர்டுகள், திருமணவாழ்த்துமடல்கள், மற்றும் சகலவிதமான ஓவியவேலைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய எண்

069/4960969



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்